## சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
## விடுமுறைக்கால சுயகற்றல் செயலட்டை
### ஆக்கம் - நிவிதிகல கல்வி வலயம்
### கணிதம் – தரம் 9
**காலம் :** 2021.05.24 **தொடக்கம்** 2021.05.30 **வரை**

தி்ங்கட்கிழமை ( 2021.05.24)

**பாடம் 7 - வெளிப்படையுண்மைகள் பக்கம் 85 ஐ நன்கு வாசித்து கீழ் வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

1) வெளிப்படையுண்மைகள் என்றால் என்ன? வெளிப்படை உண்மைகள் எதற்காக பயன்படுத்தப்படுகின்றன?
2) கேத்திர கணிதத்தின் தந்தை என அழைக்கப்படும் கணிதவியலாளர் யார்?
3) இவர் எங்கு எக்காலப்பகுதியில் வாழ்ந்தவர் ?
4) அவர் எழுதிய புத்தகத்தின் பெயர் யாது? அப்புத்தகத்தில் எதைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்?
5) பக்கம் 85 இல் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படையுண்மைகள் ஐந்தையும் குறிப்பிடுக

செவ்வாய்க்கிழமை (2021.05.25)

பக்கம் 86 ஐ நன்கு வாசித்து **வெளிப்படையுண்மை – 1 "ஒரே கணிதத்திற்கு சமமான கணியங்கள் ஒன்றுக்கொன்று சமமாகும்"** என்பதனை விளங்கி அங்கு குறிப்பிடப்பட்டுள்ளவற்றை ஆழமாக வாசித்து, **உதாரணங்கள் - 1,2** ஐ பயிற்சிக் கொப்பியில் எழுதி, பின்னர் உதாரணங்களை பார்க்காமல் செய்து பார்க்கவும். அத்தோடு **பக்கம் - 88** இல் **பயிற்சி - 7.1** ஐ பயிற்சிக் கொப்பியில் எழுதி செய்யவும்

புதன்கிழமை (2021.05.26)

பக்கம் 89 ஐ நன்கு வாசித்து **வெளிப்படையுண்மை - 2 "சமமான கணியங்களுடன் ஒரே கண்ணியத்தை கூட்டுவதால் பெறப்படும் கணியங்களுக்கு சமமாகும்"** என்பதனை விளங்கிக் கொண்டு அப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நன்கு வாசித்து **உதாரணம் -1** பயிற்சிக் கொப்பியில் பிரதி செய்து உதாரணங்களை பார்க்காமல் மீண்டும் ஒருமுறை செய்து பார்க்கவும் அத்தோடு **பக்கம் 90** இல் காணப்படும் **பயிற்சி 7.2** ஐ கொப்பியில் எழுதி செய்யவும்.

வியாழக்கிழமை (2021.05.27)

பக்கம் 91ஐ நன்கு வாசித்து **வெளிப்படையுண்மை - 3 "சமமான கணியங்களிலிருந்து ஒரே கணியத்தை கழிப்பதால் பெறப்படும் கணியங்களும் சமமாகும்"** என்பதனை விளங்கிக் அப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள **உதாரணம் - 1**ஐ பயிற்சிக் கொப்பியில் பிரதி செய்து, மீண்டும் ஒருமுறை உதாரணத்தை பார்க்காமல் செய்து பார்க்கவும். அத்தோடு **பக்கம் 92** இல் காணப்படும் **பயிற்சி - 7.3** ஐ பயிற்சிக் கொப்பியில் செய்யவும்.

வெள்ளிக்கிழமை (2021.05.28)

பக்கங்கள் 93 ,94 ஐ நன்கு வாசித்து, **வெளிப்படையுண்மை - 4 "சமமான கணியங்களை ஒரே கணியத்தால் பெருக்கும் போது பெறப்படும் கணியங்களும் சமமாகும்"** என்பதனை விளங்கிக் அப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நன்கு வாசித்து **உதாரணம் - 1**ஐ பயிற்சிக் கொப்பியில் பிரதி செய்து மீண்டும் ஒருமுறை உதாரணத்தை பார்க்காமல் செய்து பார்க்கவும் அத்தோடு **பக்கம் 96** இல் **பயிற்சி - 7.4** இல் 01 வது பயிற்சியை செய்யவும்

சனிக்கிழமை(2021.05.29)

பக்கம் 95 ஐ நன்கு வாசித்து **வெளிப்படையுண்மை – 5 "சமமான கணியங்களை ஒரே கணியத்தினால் வகுக்கும் போது பெறப்படும் கணியங்களும் சமமாகும்"** என்பதனை விளங்கிக் அப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள **உதாரணம் 1,2** ஐ பயிற்சிக் கொப்பியில் பிரதி செய்து மீண்டும் ஒருமுறை உதாரணத்தை பார்க்காமல் செய்து பார்க்கவும் அத்தோடு **பக்கம் 97** இல் **பயிற்சி - 7.4** காணப்படும் **பயிற்சிகள் 2,3** ஆகியவற்றை செய்யவும்

ஞாயிற்றுக்கிழமை(2021.05.30)

மேலே கற்ற அனைத்து விடயங்களையும் கருதிக்கொண்டு பக்கம் 97 இல் காணப்படும் வெளிப்படையுண்மைகளின் பயன்பாடுகள் என்னும் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள **உதாரணம் - 1** ஐ பயிற்சிக் கொப்பியில் எழுதிக் கொண்டு மீண்டும் ஒரு முறை செய்து பார்க்கவும் அத்தோடு **பக்கம் 98** இல் காணப்படும் பலவின பயிற்சிகளை பயிற்சி கொப்பியில் எழுதி செய்யவும்.